©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 9.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 137A] சென்னை, வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 26, 2021
மாசி 14, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்


| சட்டமுன்வடிவுகள்: | பக்கங்கள். |
|---|---|
| எண் 11/2021—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 2-4 |
| எண் 12/2021—தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டம் .. .. .. .. .. .. | 5-10 |
| எண் 13/2021—பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. | 11-12 |
| எண் 14/2021—தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டம் .. | 13-24 |

**2021—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2021**

**1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு .**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) 2—ஆம் பிரிவின் உட்பிரிவு (1) மற்றும் (4) மற்றும் 4—ஆம் பிரிவானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் மற்றும் மீதமுள்ள பிரிவுகள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு, இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின், 12 ஆம் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் XX/ 1951.

(1) (2—A)ஆம் உட்பிரிவானது, விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) (2—AA) எனும் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(2AA) சட்டமன்றப்பேரவை உறுப்பினர் எவரும் அவருடைய பதவிக்காலம் முடியும் முன்னரே இறக்கிறவிடத்து, அவரது குடும்பத்திற்கு ஒட்டுமொத்த படித்தொகையாக ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படுதல் வேண்டும்.".

(3) (2—B) —ஆம் உட்பிரிவிற்காக, அதன் கீழுள்ள விளக்கம் நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(2—B). (2—AA) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்படலாகும் ஒட்டுமொத்த படித்தொகையானது குடும்ப உறுப்பினர்களுக்கு சம பங்காக வழங்கப்படுதல் வேண்டும்.".

(4) (4—A) ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறிற்கு பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக, குளிரூட்டப்பட்ட படுக்கை வசதியுடைய பேருந்துகளாக இருக்கும் நேர்வில், அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு இருக்கை வசதி மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.".

12— B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 12— B ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில்—

"இருபதாயிரம் ரூபாய்" எனும் சொற்றொடருக்காக, "இருபத்தைந்தாயிரம் ரூபாய்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12— C ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 12-C ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக, குளிரூட்டப்பட்ட படுக்கை வசதியுடைய பேருந்துகளாக இருக்கும் நேர்வில், அத்தகைய உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு இருக்கை வசதி மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.".

செல்லுந்தன்மை.

**5.** முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2020 ஏப்ரல் 1 ஆம் நாளன்று தொடங்குகின்ற காலத்தின் போது மற்றும் இந்தச் சட்டத்தை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதி வரையிலும் ஒட்டுமொத்த படித்தொகை அல்லது ஒய்வூதியம் வழங்குவதற்காக, முதன்மைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது செய்யப்பட்ட செயல் அனைத்தும் அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையை செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட அனைத்து நேரிய காலங்களிலும் இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டமானது செயல்முறையில் இருந்ததைப் போன்று அச்சட்டத்திற்கிணங்க செல்லத்தக்கதாக செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவுப்புகளை வெளியிட்டார்,–

(a) சட்டமன்றப் பேரவை அமர்வு உறுப்பினர் எவரும் அவருடைய பதவிக்காலத்தில் இறந்துவிட்டபோது அவரது குடும்பத்திற்கு வழங்கப்படலாகும் ஒட்டுமொத்த படித்தொகையானது ரூ.2,00,000/– [இரண்டு இலட்சம்]– ரூபாயிலிருந்து ரூ.5,00,000/– [ஐந்து இலட்சம்] ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(b) சட்டமன்ற பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படலாகும் ஓய்வூதியமானது ரூ.20,000/– [இருபதாயிரம்] ரூபாயிலிருந்து ரூ.25,000/– [இருபத்தைந்தாயிரம்] ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(c) இறந்துவிட்ட சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு வழங்கப்படலாகும் குடும்ப ஓய்வூதியமானது ரூ.10,000/– [ பத்தாயிரம் ] – ரூபாயிலிருந்து ரூ.12,500/– [ பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ] – ரூபாயாக அதிகரிக்கப்படும்;

(d) மேற்சொன்ன பணப்பயன்களானது, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்துப்படும்;

(e) சட்டமன்றப் பேரவையின் அமர்வு மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்கள், மாநில அரசுக்கு சொந்தமான போக்குவரத்து கழகத்தின் குளிரூட்டப்பட்ட பேருந்து எதிலும் அவரின் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருடன் பயணம் மேற்கொள்ளும்போது அந்தப்பேருந்தில் அத்தகைய உறுப்பினருக்கு ஒரு படுக்கை வசதி வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் வாழ்க்கைத்துணை அல்லது உடனிருப்பவருக்கு ஒரு இருக்கை வசதி வழங்கப்படுதல் வேண்டும்.

2. மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, அரசானது, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்துவதென முடிவுசெய்துள்ளது.

3. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எடப்பாடி கே.பழனிசாமி,**
*முதலமைச்சர்.*

சென்னை-600 009,
26, பிப்ரவரி 2021.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2021**

**குறித்த சில இயற்றுச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் வழக்கத்திலிருந்தவை அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் இருக்கக்கூடியது அற்றுபோகக் கூடியவையான இருப்பவை கட்டாயமாக நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டம் என்று வழங்கப்பெறும்.

குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

2. இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

காப்புரைகள்.

3. இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது. அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும் சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும்;

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத் தன்மையையோ அல்லது செல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட எதனையும் அல்லது பாதிக்கப்பட்டதை அல்லது உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடப்பாட்டையோ அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடப்பாட்டினை அதிகப்படியானதையோ அல்லது ஏற்படுத்தப்பட்டிருப்பதையோ அல்லது தீர்வு எதனையும் அல்லது தொடர்பான நடைமுறையை அல்லது பற்று எதனலிருந்தும் அல்லது பற்றினை விடுவிப்பதை, தண்டம், உதவியையோ, கடப்பாட்டினையோ, கோருதலையோ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியையோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது விசயம் எதனையும் பாதிக்காது;

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகாரவரம்பை அல்லது அமைவுமுறையையோ அல்லது வாதுரையின் போதோ, வழக்கத்தையோ அல்லது நடைமுறையையோ அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காறையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, அலுவலகத்தையோ அல்லது பணியமர்த்தத்தையோ எவ்வாறிருப்பினும் அவை முறையே எந்த முறையிலும் ஈங்கிதனால் இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்த முறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன்மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகாரவரம்பு எதனையும் மீட்டெடுத்தல், அலுவலகம், பழக்கவழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது இல்லாமல் இருக்கும் பொருள் அல்லது செல்லாற்றலிலுள்ளவை இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

**இணைப்புப் பட்டியல்.**

**நீக்கறவுகள்.**

(2ஆம் பிரிவைக் காண்க)

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | *குடியரசுத் தலைவரின் சட்டம்.* |
| 1. | 1976 | 2 | 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| | | | *மையச் சட்டம்.* |
| 2. | 1858 | I | 1858–ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொழிலாளர் சட்டம். |
| | | | *தமிழ்நாடு சட்டங்கள்.* |
| 3. | 1866 | II | 1866–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை நோய் சட்டம். |
| 4. | 1953 | XIX | 1953–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |
| 5. | 1954 | XXVII | 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (திருத்தச்) சட்டம். |
| 6. | 1958 | XX | 1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் (நடைமுறைப்படுத்துதல்) சட்டம். |
| 7. | 1961 | 19 | 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்ஃபு (துணைச்) சட்டம். |
| 8. | 1962 | 6 | 1962–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரி (திருத்தச்) சட்டம். |
| 9. | 1963 | 18 | 1963 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்தச்) சட்டம். |
| 10. | 1964 | 19 | 1964–ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொழிலாளர் (திருத்தச்) சட்டம். |
| 11. | 1964 | 23 | 1964–ஆம் ஆண்டு தமிழ்நாடு மகப்பேறு பலன் (நீக்கறவுச்) சட்டம். |
| 12. | 1964 | 37 | 1964–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம். |
| 13. | 1965 | 7 | 1965–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரித் (திருத்தச்) சட்டம். |
| 14. | 1965 | 21 | 1965–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தச்) சட்டம். |
| 15. | 1965 | 27 | 1965–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்து வண்டித் திரவக விற்பனை வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 16. | 1965 | 28 | 1965–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்து வண்டித் திரவக விற்பனை வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 17. | 1965 | 30 | 1965–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 18. | 1966 | 3 | 1966–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 19. | 1966 | 8 | 1966–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |
| 20. | 1966 | 18 | 1966–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 21. | 1967 | 5 | 1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 22. | 1967 | 11 | 1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 23. | 1967 | 18 | 1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்து வண்டி திரவக விற்பனை வரி விதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 24. | 1967 | 19 | 1967–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 25. | 1968 | 2 | 1968–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 26. | 1968 | 7 | 1968–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 27. | 1968 | 12 | 1968–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 28. | 1969 | 2 | 1969–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 29. | 1969 | 3 | 1969–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 30. | 1969 | 20 | 1969–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 31. | 1970 | 2 | 1970 –ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 32. | 1970 | 3 | 1970 –ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்துவண்டி திரவக விற்பனை வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 33. | 1970 | 12 | 1970 –ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்துவண்டி திரவக விற்பனை வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 34. | 1970 | 13 | 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 35. | 1970 | 20 | 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுபாடு) திருத்தச் சட்டம். |
| 36. | 1970 | 23 | 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம். |
| 37. | 1970 | 26 | 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 38. | 1970 | 27 | 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 39. | 1971 | 7 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 40. | 1971 | 13 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 41. | 1971 | 25 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 42. | 1971 | 35 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 43. | 1971 | 44 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தயம் மற்றும் கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். |
| 44. | 1971 | 45 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம். |
| 45. | 1971 | 46 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (தகுதியிழப்பு தடுத்தல்) திருத்தச் சட்டம். |
| 46. | 1971 | 47 | 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். |
| 47. | 1972 | 8 | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்துவண்டி திரவக விற்பனை வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 48. | 1972 | 9 | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரி (திருத்தச்) சட்டம். |
| 49. | 1972 | 11 | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 50. | 1972 | 19 | 1972–ஆம் ஆண்டு பொது வக்ஃபு (கால வரம்பினை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்டம். |
| 51. | 1972 | 31 | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 52. | 1972 | 3 | 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 53. | 1973 | 9 | 1973 –ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |

| வரிசை எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 54. | 1973 | 16 | 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 55. | 1973 | 21 | 1973–ஆம் ஆண்டு பொது வக்ஃபு (கால வரம்பினை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்டம். |
| 56. | 1973 | 26 | 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்துவண்டி திரவக விற்பனை வரிவிதிப்பு மற்றும் கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். |
| 57. | 1973 | 28 | 1973 –ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம். |
| 58. | 1973 | 39 | 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 59. | 1973 | 40 | 1973 –ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 60. | 1974 | 1 | 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம். |
| 61. | 1974 | 23 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 62. | 1974 | 24 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 63. | 1974 | 35 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்துவண்டி திரவக விற்பனை வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 64. | 1974 | 36 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 65. | 1974 | 37 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 66. | 1974 | 43 | 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம். |
| 67. | 1975 | 45 | 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி மற்றும் விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம். |
| 68. | 1981 | 7 | 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டம். |
| 69. | 1986 | 35 | 1986–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 70. | 1989 | 21 | 1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 71. | 1993 | 23 | 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 72. | 1996 | 31 | 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 73. | 1998 | 23 | 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 74. | 1999 | 37 | 1999–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 75. | 2001 | 13 | 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 76. | 2002 | 23 | 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 77. | 2005 | 14 | 2005–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையமானது, பல்வேறு இயற்றுச் சட்டங்கள் மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு தன்னுடைய பல்வேறு அறிக்கைகளில் பரிந்துரை செய்துள்ளது. மேலும், 1858–ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொழிலாளர் சட்டத்தை (மையச் சட்டம்–I/1858) ஆய்வு செய்து, நீக்கறவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுக்குமாறு இந்திய அரசின் சட்டமியற்றும் துறை, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம், இவற்றிற்கிடையில் கோரியுள்ளது. மாநிலச் சட்ட ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் இந்திய அரசின் வேண்டுகோளை கருத்தில் கொண்டு மிகவும் பழமையான மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கின்ற சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு அரசானது முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

சென்னை-600 009,
26, பிப்ரவரி 2021.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021–**ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் **26–**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130–**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2021**

**1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில், மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாவது ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2021–ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு, அளவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக, குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XVI/1908. 2. 1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டமென குறிப்பிடப்படுவதான) 32–ஆம் பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:- 32–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

‘‘வரம்புரையாக, மாநில அரசின் அறிவிக்கையின் வாயிலாக, மின்னணு முறைகள் மூலம் முன்னிலைப்படுத்தப்படலாகும் அத்தகைய ஆவணங்களைக் குறித்திடும்”.

3. முதன்மைச் சட்டத்தின் 32–**A** பிரிவிற்கு பதிலாக, பின்வரும் பிரிவுகள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: 32–**A** எனும் பிரிவினை மாற்றியமைத்தல்

**“32–*A*. மின்னணு முறையிலான பதிவு.**–ஆவணமானது மின்னணு முறை வாயிலாக பதிவுக்காக தாக்கல் செய்யப்படும் நேர்வில், அதனை தாக்கல் செய்வதற்கான வழிமுறை, ஏற்புக்காக வருகை தருதல், மேலெழுத்துக்கள், கையொப்பம் மற்றும் முத்திரையிடுதலுக்கான முறை, பதிவுக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவதற்கான வழிமுறை மற்றும் அத்தகைய பிற செயல்முறைகளானவை, இதன் பொருட்டு உருவாக்கப்பட்ட விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்”.

**32-*AA*. புகைப்படத்தை கட்டாயமாக இணைத்தல் போன்றவை.**–முறையான பதிவு அலுவலகத்தில் ஒவ்வொரு நபரும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யும் நிகழ்வில், பிரிவு 32–ன் கீழ் தனது கடவுச் சீட்டளவு புகைப்படம் மற்றும் விரல்ரேகையினை ஆவணத்தில் பதித்தல் வேண்டும்:

வரம்புரை: அசையா சொத்தின் உரிமை மாற்றம் தொடர்புடைய அத்தகைய ஆவணத்தில் அத்தகைய சொத்தின் வாங்குபவர் மற்றும் விற்பவர் ஒவ்வொருவரின் கடவுச்சீட்டளவு புகைப்படம் மற்றும் விரல்ரேகை குறிப்பிடப்பட்ட ஆவணத்தில் பதிக்கப்படுதல் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டத்தின் 52–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கூறு (a)–ல், “32A–ஆம் பிரிவின் கீழ்” எனும் சொற்றொடருக்கு பதிலாக, “32–AA–ஆம் பிரிவின் கீழ்” எனும் சொற்றொடரானது மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். 52–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 69–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில், (gg) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 69–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

‘‘(ggg) ஆவணமானது மின்னணு முறை வாயிலாக பதிவுக்காக தாக்கல் செய்யப்படும் நேர்வில், ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான வழிமுறை, ஏற்புக்காக வருகை தருதல், ஏற்பிசைவுகள், கையொப்பம் மற்றும் முத்திரையிடுதலுக்கான முறை, பதிவுக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவதற்கான வழிமுறை மற்றும் அத்தகைய பிற செயல்முறைகளுக்கான நடைமுறையை ஒழுங்குபடுத்துதல்”.

**<u>நோக்க—காரண விளக்கவுரை</u>**

**1908**—ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மையச் சட்டம் XVI/1908) **17**—ஆம் பிரிவின் படி, உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கை ஆவணங்களுக்கான பதிவு செய்தலானது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வங்கிகளிடமிருந்து தொழிற் கடன்கள் பெறுவதற்காக, உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கை ஆவணங்களை தொடர்புடைய சார்பதிவாளர் முன்பு பதிவு செய்வதற்காக நேரில் ஆஜராகி முன்னிலைப்படுத்துவதில் தொழிற்துறையானது மிகுந்த இடர்பாட்டை எதிர்கொள்கிறது. மாநில அரசானது, மத்திய அரசு அறிவித்த ஊக்கத் திட்டங்களை பயன்படுத்தி, குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறைக்கு புத்துயிரூட்டுதலை முழுமையான வகையில் ஊக்குவிக்கிறது. உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கைகள் போன்ற அத்தகைய ஆவணங்களை பதிவு செய்வதற்காக நேரில் ஆஜராகி முன்னிலைப்படுத்துவதற்கான தேவையை விட்டொழிப்பது, தொழில் செய்வதை எளிதாக்க உதவுகின்றது. எனவே, **1908**—ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தினை (மையச் சட்டம் XVI/1908) அதன் பொருட்டு தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்த சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.சி. வீரமணி,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

சென்னை-600 009,
26, பிப்ரவரி 2021.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2021–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2021**

**இம்மாநிலத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும், அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்காக, தமிழ்நாடு மாநிலத்திற்குள் இருபது விழுக்காடு இடஒதுக்கீட்டிற்குள்ளாக ஒதுக்கீடு செய்வதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்களின் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதிலும் அரசின்கீழ் வருகின்ற பணிகளுக்கான நியமனங்களிலும் ஒதுக்கீடு செய்வதற்கான கொள்கை ஒன்று தமிழ்நாடு மாநிலத்தில் நெடுங்காலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதாலும்;

தமிழ்நாடு மாநிலமானது, சமுதாயத்தின் அடிநிலையில் உள்ள மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வந்திருப்பதாலும், பின் தங்கிய சமூகங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற முதலாவது அரசாணையானது 1921–ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு மாநிலத்தில், 1927–ஆம் ஆண்டில் சமூகங்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது என்பதாலும்;

பல ஆண்டுகளாக சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்பட்ட நிலையில் உழன்று வந்துள்ள தமிழ்நாட்டின் மக்கள் தொகையின் பெருமளவு சதவீதத்தினர் மேற்சொன்ன இடஒதுக்கீடுக் கொள்கையின் பயன்களைத் துய்க்கத் தொடங்கியுள்ளதோடு அவர்கள் தங்கள் நிலையினை மேம்படுத்திக் கொள்ளவும், உயர்ந்த வாழ்க்கைத் தரங்களை எய்தவும் இயன்றுள்ளது என்பதாலும்;

1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 45/1994) தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது என்பதாலும்;

1994–ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஆறாம் திருத்தச்) சட்டத்தின் மூலம் தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 45/1994 என்பதான மாநிலச் சட்டத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அதனை அரசமைப்பின் 31–B–எனும் உறுப்பின் கீழ் IX–ஆம் பட்டியலில் சேர்த்திருப்பதாலும்;

அரசமைப்பின் 14–ஆம் கூறின்படி சமமானவர்கள் சமமற்றவர்களுடன் சமமாகக் கருதி நடத்தப்படுதல் இயலாது; மற்றும் வேறுபட்ட முறையில் நடத்துவதானது அது எய்த விழையும் நோக்கத்துடன் பகுத்தறிவுக்கு உகந்த முறையிலான இணைப்பினைப் பெற்றிருக்குமானால் வேற்றுமைப்படுத்தி பாகுபாடு செய்வதாகக் கூற இயலாது என்பதாலும்;

அரசமைப்பின் 30–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறில் சுட்டப்பட்ட சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் அல்லாத அரசின் உதவி பெறுவதாயினும், பெறாதவையுமான தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களுக்கு, குடிமக்களில் சமூக அல்லது கல்வி நிலையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் அல்லது பட்டியல் சாதியினரின் அல்லது பட்டியல் பழங்குடிகளின் மாணவர் சேர்க்கை தொடர்பாக தனிவகைமுறைகள் எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவர்தம் மேம்பாட்டுக்காகச் சட்டத்தின் வாயிலாக அத்தகைய தனி வகைமுறைகள் எவற்றையும் செய்வதற்கு, அரசமைப்பின் 15–ஆம் உறுப்புக்கான (5)–ஆம் கூறை அமைத்து, 2005–ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று மூன்றாம் திருத்தச்) சட்டமானது இயல்விப்பதாலும்;

அரசமைப்பின் 15–ஆம் உறுப்பின் (5)–ஆம் கூறின் காரணமாகவும் தமிழ்நாடு மாநிலத்தில் பெரும்பான்மை மக்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காகவும் வேண்டி, குடிமக்களில் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும், அரசமைப்பின் 30–ஆம் உறுப்பின், (1)ஆம் கூறில் சுட்டப்பட்ட இம்மாநிலத்திலுள்ள, சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் அல்லாத பிற தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் தற்போதுள்ள அறுபத்து ஒன்பது சதவீத இடஒதுக்கீட்டினைத் தொடர்தல் வேண்டுமெனக் கொள்கை முடிவொன்றை எடுத்ததற்குப் பின்னர், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு செய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 12/2006) தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாலும்;

அரசமைப்பின் 16–ஆம் உறுப்பின் (4)–ஆம் கூறானது, அரசின் கீழ்வரும் பணிகளில் போதுமான அளவிற்குச் சார்பாற்றம் செய்யப்படாத குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு செய்ய இயல்விக்கிறது என்பதாலும்;

அரசமைப்பின் 38–ஆம் உறுப்பின்(1)–ஆம் கூறின்படி அரசானது, தேசிய வாழ்வின் நிறுவனங்கள் அனைத்திலும் சமுதாய, பொருளியியல், அரசியல், நீதி நிறைந்து நிலவுவதான ஒரு சமுதாய முறையமைவினைப் பயனுற எய்திப் பாதுகாத்து, மக்களின் நலப்பாட்டை வளர்த்திட அரிதின் முயலுதல் வேண்டும் என்பதாலும்;

அரசமைப்பின் 38–ஆம் உறுப்பின்(2)–ஆம் கூறின்படி அரசானது தனிமனிதர்களுக்கு இடையே மட்டுமின்றி வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அல்லது வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பிரிவினருக்கிடையே, குறிப்பாக வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை இயன்ற அளவு குறைப்பதற்கு அரிதின் முயல்வதோடு, அவர்களின் சமுதாயப்படிநிலை, வளவசதிகள், வாய்ப்பு நலன்கள் ஆகியவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கும் முனைந்து முயலுதல் வேண்டும் என்பதாலும்;

அரசமைப்பின் 39–ஆம் உறுப்பின் (b) எனும் கூறின்படி அரசானது குறிப்பாக பொதுமக்கள் நலன்களுக்கு நனி சிறக்க உதவும் வகையில் சமுதாயத்தின் பொருள் வளங்கள் மீதான உரிமையையும், கட்டுப்பாட்டினையும் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்யும் வகையில் தன் கொள்கையை நெறிப்படுத்துதல் வேண்டும் என்பதாலும்;

அரசமைப்பின் 39–ஆம் உறுப்பின் (c) எனும் கூறின்படி அரசானது குறிப்பாக பொருளியியல் முறைமையின் செயல்பாட்டினால் செல்வ வளமும், உற்பத்திச் சாதனங்களும் பொது நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஒரு சிலரிடம் குவிந்து விடாமல் இருப்பதனை உறுதி செய்வதற்காக அதன் கொள்கையை நெறிப்படுத்துதல் வேண்டும் என்பதாலும்;

கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 45/1994–இன் கீழ் மற்ற வகுப்பினர்களுக்கிடையே, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவிக்கை செய்யப்பட்ட வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னி குல ஷத்திரியா உள்ளடங்கலான வன்னியகுல ஷத்திரியா அவர்களின் அதிகப்படியான மக்கள் தொகையின் காரணத்தினால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்களின் பட்டியலில் பிற சமூகத்தினர்களிடம் போட்டியிட முடியாததாலும், கல்வி நிலையங்களில் சேர்க்கைகளிலும் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளிலும் நியாயமான பங்கைப் பெறுவதற்காக அவர்களுக்கான தனி இட ஒதுக்கீட்டைக் கோரியது என்பதாலும்;

வன்னியகுல ஷத்திரியா சமூகத்தினருக்காக உள் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையமானது, அது முன்னர் ஆலோசிக்கப்பட்டவாறு, தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களிலும், அத்துடன் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளிலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்காக வழங்கப்பட்ட இருபது விழுக்காடு இட ஒதுக்கீட்டிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என பட்டியலிடப்பட்ட வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னி குல ஷத்திரியா உள்ளடங்கலான வன்னியகுல ஷத்திரியா அவர்களுக்கு பத்தரை விழுக்காடு அளவிற்கு தனி ஒதுக்கீடு வழங்கப்படலாம் என அரசிற்கு பரிந்துரை செய்ததாலும்;

மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் **45/1994**—இன் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினராக பட்டியலிடப்பட்ட சமூகத்தினருக்கு உரியதான இருபது விழுக்காட்டிற்குள், அவர்களுக்கிடையே உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கான இயலுமையை குறித்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தின் தலைவருக்கு பார்வை குறிப்பு செய்யப்பட்டதன் பேரில், தலைவரானவர் மேற்சொன்ன இருபது விழுக்காட்டிற்குள் வன்னிய குல ஷத்திரியா சமூகத்தினருக்கு பத்தரை விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதற்காக மேற்சொன்ன ஆணையத்தின் அப்போதைய தலைவரின் பரிந்துரையை குறிப்பிட்டு, பகிர்ந்தளிக்கப்பட்ட சமூக நீதி எளிதில் கிடைக்க வசதி செய்வதற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினராக அறிவிக்கப்பட்ட பிற சமூகத்தினரை, அவர்களின் மக்கள் தொகை வீதத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவதற்கு எந்த ஒரு தடையும் இல்லை என கூறியுள்ளார் மற்றும் அதற்கிணங்கியபடி வன்னியகுல ஷத்திரியா சமூகத்தினருக்கு பரிந்துரைக்கப்பட்ட பத்தரை விழுக்காடு நீங்கலாக மீதமுள்ளவை, சீர் மரபினர் மற்றும் சீர் மரபினருடன் ஒத்த தன்மையுடைய மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருடன் ஒன்றுமாக, மற்றும் மேற்சொன்ன வகையினுள் அடங்காத பிற மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றொன்றுமாக இரண்டு வகைகளாக வகை செய்யப்படலாம் என அறிவுறுத்தியுள்ளார் மற்றும் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் **45/1994**—இன் கீழ் வழங்கப்பட்ட ஒட்டு மொத்த இருபது விழுக்காட்டிற்குள், அவர்களுக்கு முறையே, ஏழு விழுக்காடு மற்றும் இரண்டரை விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்காக வகை செய்துள்ளார் என்பதாலும்;

மாநில அரசானது கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் **45/1994**—இன் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்ட இருபது விழுக்காடு இட ஒதுக்கீட்டின் நன்மைகளை அவர்கள் அனைவருக்குமிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தின் தலைவரால் மேற்சொன்ன அறிவுறுத்தலின்படி அவர்களை வகைப்படுத்தவும், அத்தகைய ஒவ்வொரு வகையினருக்கும் இருபது விழுக்காட்டிற்குள்ளாக அத்தகைய விழுக்காட்டளவு இட ஒதுக்கீடு வழங்குவதற்கும் கொள்கையின் முடிவினை எடுத்துள்ளது என்பதாலும்;

இந்திய குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம், **2021** ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டம் என வழங்கப் பெறும்.

**(2)** இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் பிறவாறு வேறு பொருள் குறித்தாலன்றி:—

(a) ‘‘தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு’’ என்பது, **6**ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் **45/1994**

(b) ‘‘சீர்மரபினர்கள்’’ என்பது, சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய சமூகத்தினர் அல்லது சமூகத்தினர்கள் மற்றும் (இதன்பின்பு **1994** ஆம் ஆண்டுச்சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), **1993**ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும் பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் கீழ் அரசினால் சீர்மரபினர்களாக அறிவிக்கை செய்யப்பட்டவர்கள் எனப் பொருள்படும்;

(c) ‘‘கல்வி நிலையங்கள்’’ என்பது, **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்;

(d) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(e) ‘‘மிகவும் பிற்படுத்தப்பட்ட குடிமகன்கள்’’ என்பது, சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய குடிமக்களின் வகுப்பினர் அல்லது வகுப்பினர்கள் மற்றும் **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் அரசினால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என அறிவிக்கை செய்யப்பட்டவர்கள் எனப் பொருள்படும்;

(f) ‘‘பகுதி–மி.பி.வ. (வ) சமூகத்தினர்கள்’’ என்பது, **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் அரசால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிக்கை செய்யப்பட்ட, இணைப்புப் பட்டியலின் பகுதி–மி.பி.வ.(வ)–இல் குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்தினர் அல்லது சமூகத்தினர்கள் எனப் பொருள்படும்;

(g) ‘‘பகுதி–மி.பி.வ. மற்றும் சீ.ம. சமூகத்தினர்கள்’’ என்பது, **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் அரசால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள் என அறிவிக்கை செய்யப்பட்ட, இணைப்புப் பட்டியலின் பகுதி–மி.பி.வ. மற்றும் சீ.ம.–இல் குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்தினர் அல்லது சமூகத்தினர்கள் எனப் பொருள்படும்;

(h) ‘‘பகுதி–மி.பி.வ. சமூகத்தினர்கள்’’ என்பது, **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் அரசால் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிக்கை செய்யப்பட்ட, இணைப்புப் பட்டியலின் பகுதி–மி.பி.வ.–இல் குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்தினர் அல்லது சமூகத்தினர்கள் எனப் பொருள்படும்;

(i) ‘‘தனியார் கல்வி நிலையம்’’ என்பது, (இதன் பின்பு **2006**–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) **2006**–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்;

(j) ‘‘இணைப்புப் பட்டியல்’’ என்பது, இச்சட்டத்தில் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்;

தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு.

**3. 1994**ஆம் ஆண்டுச் சட்டத்தில் அல்லது **2006**ஆம் ஆண்டுச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையிலுள்ள பிறசட்டம் எதிலும் அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும், என்ன அடங்கியிருந்த போதிலும், **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள் என அறிவிக்கை செய்யப்பட்ட சமூகத்தினர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியான பின்தங்கிய நிலையைக் கருத்தில் கொண்டு, தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் சேர்க்கைக்கான பாடப்பிரிவு அல்லது புலம் ஒவ்வொன்றிலும் ஆண்டொன்றுக்கு அனுமதிக்கப்படும் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்த இடஒதுக்கீடானது, பகுதி–மி.பி.வ.(வ) சமூகத்தினர்கள், பகுதி–மி.பி.வ. மற்றும் சீ.ம. சமூகத்தினர்கள் மற்றும் பகுதி–மி.பி.வ. சமூகத்தினர்களுக்கு, **1994**ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் **2006** ஆம் ஆண்டுச்சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இருபது விழுக்காடு என்ற அளவிற்குள்ளாக, முறையே பத்தரை விழுக்காடு, ஏழு விழுக்காடு மற்றும் இரண்டரை விழுக்காடு என இருத்தல் வேண்டும்.

அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளில் இடஒதுக்கீடு.

**4. 1994**ஆம் ஆண்டுச் சட்டம் அல்லது **2006**ஆம் ஆண்டுச் சட்டம் அல்லது தற்போது நடைமுறையிலுள்ள பிற சட்டங்கள் எதிலும், அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும், என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசின் கீழ்வரும் பணிகளில் **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் என அறிவிக்கை செய்யப்பட்ட சமூகத்தினர்களுக்கு, போதிய அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமல் உள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, பகுதி–மி.பி.வ.(வ) சமூகத்தினர்கள், பகுதி–மி.பி.வ. மற்றும் சீ.ம. சமூகத்தினர்கள் மற்றும் பகுதி–மி.பி.வ. சமூகத்தினர்களுக்கு, அரசின் கீழ்வரும் நியமனங்கள் அல்லது பதவிகளுக்கான ஒதுக்கீடானது, **1994**ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இருபது விழுக்காடு என்ற அளவிற்குள்ளாக, முறையே பத்தரை விழுக்காடு, ஏழு விழுக்காடு மற்றும் இரண்டரை விழுக்காடு என இருத்தல் வேண்டும்.

விளக்கம்,— இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, ''அரசின் கீழ் வருகின்ற பணிகள்'' என்பது —

(i) அரசு;

(ii) மாநிலத்திலுள்ள சட்டமன்றம்;

(iii) ஏதேனும் உள்ளாட்சி அதிகார அமைப்பு;

(iv) அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள, ஏதேனும் கழகம் அல்லது நிறுமம்;

(v) மாநிலச் சட்டமன்றமானது, சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தினைப் பெற்றிருக்கிற ஏதேனும் பிற அதிகார அமைப்பு ஆகியவற்றின் கீழ் வருகின்ற பணிகளை உள்ளடக்கும்.

இடஒதுக்கீடு பாதிக்கப்படுதல் ஆகாது.

5. இச்சட்டத்தின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளில், என்ன அடங்கியிருந்த போதிலும், 1994ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் என அறிவிக்கை செய்யப்பட்ட சமூகத்தினர்களைச் சேர்ந்த மாணவர்கள் அல்லது உறுப்பினர்களின் கோரிக்கைகளானது, தகுதி அடிப்படையில் நிரப்பப்படவேண்டிய இடஒதுக்கீடற்ற இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகளுக்காகவும் கூட பரிசீலிக்கப்படுதல் வேண்டும் மற்றும் இணைப்புப் பகுதி—மி.பி.வ.(வ) சமூகத்தினர்கள், பகுதி—மி.பி.வ. மற்றும் சீ.ம. சமூகத்தினர்கள் மற்றும் பகுதி—மி.பி.வ. சமூகத்தினர்களைச் சேர்ந்த மாணவர் அல்லது உறுப்பினர் ஒருவர் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுமிடத்தில், தேவைக்கேற்ப, பகுதி—மி.பி.வ.(வ) சமூகத்தினர்கள், பகுதி—மி.பி.வ. மற்றும் சீ.ம. சமூகத்தினர்கள் மற்றும் பகுதி—மி.பி.வ. சமூகத்தினர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகளின் எண்ணிக்கையானது பாதிக்கப்படுதல் ஆகாது.

தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு.

6. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, மாவட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அலுவலர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும், இச்சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக இதன்கீழ் செய்யப்பட்ட விதிகளினைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காகத் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பாக நியமிக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

பணிப்பாணை வழங்குவதற்கான அரசின் அதிகாரம்.

7. (1) அரசானது, ஆணையின் வாயிலாக, பொது நலனை முன்னிட்டு, அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட நேர்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி விசாரணை ஒன்றைச் செய்வதற்கு அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினைப் பணிக்கலாம்; மற்றும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அதனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அல்லது அதனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முடிவினை, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய கால அளவிற்குள், அரசுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(2). (1)—ஆம் உட்பிரிவின்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடம் இருந்து அறிக்கை பெறப்பட்டதன் பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்பாணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய பணிப்பாணையானது இறுதியானதாகவும், கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

மையச்சட்டம் XLV/1860

தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது பொது ஊழியராதல்.

8. 6—ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21—ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**9.** இந்தச் சட்டத்தின் படியோ அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்புக்கோ, அரசுக்கோ அல்லது அதன் அலுவலர்கள் எவருக்குமோ, எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எவையும் தொடுக்கப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**10. (1)** இந்த அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் வேண்டும்; மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டால் அன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு இப்பேரவை அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்கு பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லும் தன்மைக்கும் குந்தகம் இன்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**11.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, **தமிழ்நாடு அரசிதழில்** ஆணை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்ட கால அளவு ஒன்று முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**இணைப்புப்பட்டியல்**

**(பிரிவு 2(f),(g) மற்றும் (h) ஐக் காண்க)**

**பகுதி – மி.பி.வ (வ)**

| வ.எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 1 | வன்னியகுல ஷத்திரியா (வன்னியர், வன்னியா, வன்னியகவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னிகுல ஷத்திரியா உட்பட) |

**<u>பகுதி – மி.பி.வ மற்றும் சீ.ம</u>**

**(a) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்**

| வ. எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 1 | அம்பலக்காரர் |
| 2 | அரயர் ( கன்னியாகுமரி மாவட்டம் ) |
| 3 | பெஸ்தா, சிவியர் |
| 4 | பட்ராஜு (சத்திரிய ராஜுக்கள் நீங்கலாக) |
| 5 | போயர், ஒட்டர் |
| 6 | தாசரி |
| 7 | டொம்மாரா |
| 8 | ஜாம்புவனோடை |
| 9 | ஜோகி |
| 10 | கொரச்சா |
| 11 | இலத்தின் கத்தோலிக்க கிறித்தவ வண்ணார் ( கன்னியாகுமரி மாவட்டம் ) |
| 12 | மோண்ட கொல்லா |
| 13 | முட்லகம்பட்டி |
| 14 | நோக்கர் |
| 15 | பரவர் (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 16 | பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் – கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தை சார்ந்த பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட. |
| 17 | மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர்) (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) |
| 18 | முக்குவர் அல்லது முகையர் (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) |
| 19 | புண்ணான் வேட்டுவ கவுண்டர் |
| 20 | தெலுகுபட்டி செட்டி |
| 21 | தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவார் தொழுவநாயக்கர் மற்றும் எர்ரகொல்லர் உட்பட) |
| 22 | வலையர் (செட்டிநாடு வலையர்கள் உட்பட) |
| 23 | வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (அகஸா, மடிவலா, ஏகாலி, ராஜகுலா, வெலுத்தாடர் மற்றும் ராஜாகா உட்பட) (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 24 | வேட்டைக்காரர் |
| 25 | வேட்டுவகவுண்டர் |

## (b) சீர்மரபினர்கள்

| வ.எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 1 | ஆத்தூர் கீழ்நாடு கொறவர் (சேலம், நாமக்கல், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்) |
| 2 | ஆத்தூர் மேல்நாடு கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 3 | ஆப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 4 | அம்பலக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 5 | அம்பலக்காரர் (சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்) |
| 6 | போயாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர்,அரியலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) |
| 7 | பட்டு துர்கா |
| 8 | சி.கே. கொறவர் (கடலூர் மற்றும் விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்) |
| 9 | சக்காளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 10 | செங்கயம்புடி கொறவர் (திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 11 | செட்டிநாடு வலையர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 12 | டோம்ஸ் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்) |
| 13 | தொப்ப கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 14 | டொம்மார்ஸ் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 15 | தொங்க போயா |
| 16 | தொங்க ஊர் கொரச்சாஸ் |
| 17 | தேவகுடி தலையாரி |
| 18 | தொப்பை கொரச்சாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 19 | தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 20 | தொங்க தாசரி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 21 | கொரல்லா தொட்ட போயா |
| 22 | குடு தாசரி |
| 23 | கந்தர்வ கோட்டை கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம், அரியலூர் மாவட்டங்கள்) |

| வ.எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 24 | கந்தர்வ கோட்டை கள்ளர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 25 | இஞ்சி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 26 | ஜோகி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூார் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 27 | ஜாம்பவனோடை |
| 28 | காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூார் மாவட்டங்கள்) |
| 29 | கல்ஒட்டர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 30 | கொறவர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர்,அரியலூார், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சென்னை , மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 31 | களிஞ்சி தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 32 | கூட்டப்பால் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 33 | காலா கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 34 | கலவதில போயாஸ் |
| 35 | கேப்மாறி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூார் மாவட்டங்கள்) |
| 36 | மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்) |
| 37 | மொண்ட கொறவர் |
| 38 | மொண்டகொல்லா (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 39 | முட்லகம்பட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 40 | நோக்கர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 41 | நெல்லூார்பேட்டை ஒட்டர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூார் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் ) |
| 42 | ஒட்டர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 43 | பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 44 | பொன்னை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூார் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 45 | பிரமலைக்கள்ளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்) |

| வ.எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 46 | பெரியசூரியூர் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் ) |
| 47 | படையாச்சி (கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்) |
| 48 | புண்ணாண்வேட்டுவகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 49 | சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 50 | சேலம் மேல்நாடுகொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார், சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 51 | சேலம் உப்பு கொறவர் ( சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 52 | சக்கரதாமடை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 53 | சாரங்கபள்ளி கொறவர் |
| 54 | சூரமாறி ஒட்டர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 55 | செம்பநாடு மறவர் ( சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 56 | தள்ளிகொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 57 | தெலுங்கப்பட்டி செட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 58 | தொட்டியநாயக்கர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்) |
| 59 | தோகமலைகொறவர்கள் அல்லது கேப்மாறி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 60 | உப்புகொறவர் அல்லது செட்டிபல்லிகொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 61 | ஊராளிகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 62 | வயல்பாடு அல்லது நாவல்பேட்டா கொரச்சாஸ் |
| 63 | வடுவார்பட்டி கொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 64 | வலையர் (மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் , திருப்பூர் மாவட்டங்கள்) |
| 65 | வேட்டைக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 66 | வேட்டக்கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 67 | வரகனேரி கொறவர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 68 | வேட்டுவ கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |

<u>பகுதி – **மி.பி.வ**</u>

| வ. எண் | சாதியின் பெயர் |
|---|---|
| 1 | ஆண்டிப்பண்டாரம் |
| 2 | எரவல்லர் (இவ்வகுப்பு பழங்குடியின வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 3 | இசை வெள்ளாளர் |
| 4 | ஜங்கம் |
| 5 | கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர். ஈரோடு மாவட்டங்களில் மட்டும்) |
| 6 | குலாலா (குயவர் மற்றும் கும்பரர் உட்பட) |
| 7 | குன்னுவர் மண்ணாடி |
| 8 | குரும்பா, குரும்பா கவுண்டர் |
| 9 | குருகினி செட்டி |
| 10 | மருத்துவர், நாவிதர், மங்களா, வேலக்கட்டளவர், வேலக்கட்டள நாயர் மற்றும் பிரனோபகாரி |
| 11 | மவுண்டாடன் செட்டி |
| 12 | மகேந்திரா, மேதரா |
| 13 | நரிக்குறவர் ( குருவிக்காரர்) |
| 14 | பணிசெய்வான் / பணிசிவன் |
| 15 | பண்ணயார் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்திகாரர் நீங்கலாக) |
| 16 | சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சாத்தானி, சட்டாடி மற்றும் சட்டாட ஸ்ரீ வைஷ்ணவா உட்பட) |
| 17 | சோழிய செட்டி |
| 18 | தொண்டமான் |
| 19 | தொறையர் ( நீலகிரி ) |
| 20 | தொறையர் (சமவெளி) |
| 21 | திருநங்கைகள் அல்லது அரவாணி |
| 22 | யோகீஸ்வரர் |

**நோக்கக் காரண விளக்கவுரை**

1985ஆம் ஆண்டில் திரு.ஜே.ஏ.அம்பாசங்கர் IAS (ஓய்வு) அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தனது அறிக்கையை சமர்பித்துள்ளது. கூறப்பட்ட ஆணையமானது, தமிழ்நாடு மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களின் மக்கள் தொகையினை மதிப்பிட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் அப்போதிருந்த அனைத்து அத்தகைய சாதிகள் மற்றும் சமூகங்களின் பின்தங்கிய நிலையைக் கண்டறிவதற்காக கூறப்பட்ட ஆணையத்தால் மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களிடம் கணக்கெடுப்பு ஒன்று எடுக்கப்பட்டது.

1993ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், பட்டியல் சாதியினர்கள் மற்றும் பட்டியல் பழங்குடியினர்கள் (கல்வி நிலையங்களில் இடங்கள் மற்றும் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1994) கீழ் தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்களான கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கையிலும் அரசின் கீழ்வரும் பணிகளில் பதவிகள் அல்லது நியமனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக மற்றும் சீர்மரபினருக்காக முறையே 30% மற்றும் 20% இடஒதுக்கீட்டை பயன்படுத்தி வந்துள்ளனர்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர், பிற சாதியினர் மற்றும் சமூகத்தினருடன் போட்டியிட்டு, அவர்களின் உரிய மற்றும் அத்தகைய ஒதுக்கீட்டின் பலன்களின் சட்டப்படியான பங்கினை பெற இயலவில்லை என்பதாலும், அத்தகைய கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கையில் மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளில் அவர்களுக்கான தனிப்பட்ட ஒதுக்கீடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த வன்னியகுல சத்ரியர்களுக்கு வழங்குவதற்காக அவர்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வரப் பெற்றுள்ளன. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவரானவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்குள் பல்வேறு பிரிவினர்களுக்காக உள் ஒதுக்கீடு வழங்குவதற்காக பல்வேறு சமூகத்தினரால் வைக்கப்பட்ட கோரிக்கையை ஆய்வு செய்து, தமிழ்நாடு மாநிலத்திற்குள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களின் சமமான வளர்ச்சியை முன்னேற்றுவதற்காகவும் பல்வேறு நலன்களுக்கு சிறந்த வாய்ப்பினை வழங்குவதற்காகவும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்குள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (வ)-10.5%, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்-7%, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் -2.5% ஆகிய மூன்று பிரிவுகளுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேற்கூறப்பட்ட ஆணையத்தின் கூறப்பட்ட பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவும் அதற்கிணங்க இட ஒதுக்கீடு கொள்கையை நிறைவேற்றவும் அரசானது முடிவு செய்துள்ளது.

இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகின்றது.

**எடப்பாடி K. பழனிசாமி**
*முதலமைச்சர்.*

சென்னை-600 009,
26, பிப்ரவரி 2021.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.